டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.07.2026 புதன்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 035 - Madurai | Online Edition

# தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தறிகள், உபகரணங்கள் உள்ளிட்டவற்றை மேம்படுத்துவதற்கு நிதியுதவி

புது தில்லி, ஜூலை 28

தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மேம்படுத்தப்பட்ட தறிகள், உபகரணங்கள், பணிக்கூடங்களை அமைத்தல், தயாரிப்பு, வடிவமைப்பு மேம்பாடு ஆகிய பல்வேறு நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியுதவி அளிக்கப்படுகிறது. கைத்தறி நெசவாளர்களை தொழில்முறை ரீதியாக நிர்வகிக்கப்படும் மற்றும் உறுப்பினர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களாக ஒருங்கிணைப்பதற்கான முக்கிய நிறுவன அமைப்பாக கைத்தறி உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதையும் வலுப்படுத்துவதையும் மத்திய அரசு ஊக்குவிக்கிறது. தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2020-21 முதல் 2025-26 வரை 237 கைத்தறி உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் உள்ள கைத்தறித் துறைக்குத் தேவையான கடன் தேவைகளை குறைவான செலவில் பெறுவதற்கு வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து உரிய நேரத்தில் உதவிகளைப் பெற்றுத் தர சலுகைக்கடன், நெசவாளர் முத்ரா திட்டம் ஒரு பகுதியாகச் செயல்படுத்தப்படுகிறது.

தனிப்பட்ட கைத்தறி நெசவாளர் அல்லது நெசவாளர் தொழில் முனைவோருக்கு கடன் தொகையில் 20 சதவீதம் (அதிகபட்சம் ரூ.25,000) வரம்பிற்குட்பட்டும் கைத்தறி நிறுவனங்களுக்கு கடன் தொகையில் 20 சதவீதம் (அதிகபட்சம் 20 லட்சம் வரை அதாவது ஒவ்வொரு 100 நெசவாளர்கள் / பணியாளர்களுக்கு ரூ.2 லட்சம்) வரம்பிற்குட்பட்டும் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 48,891 கைத்தறிகளும் உபகரணங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன. 4,216 தனிநபர் பணிக்கூடங்கள் மேம்படுத்தப்பட்டு உள்ளன.

தமிழ்நாட்டில் 5,466 கைத்தறிகளும், 581 தனிநபர் பணிக்கூடங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகவலை மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் பபித்ரா மார்கரிட்டா மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

# நெல்லில் பச்சைப்பாசி கட்டுப்பாடு – ஒரு பார்வை



திருச்சி, ஜூலை 28

திருச்சி மாவட்டத்தில் தற்போது பரவலாக குறுவை நெல் சாகுபடி மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் இலால்குடி வட்டாரத்தில் கள ஆய்வு மேற்கொண்டனர். இந்த கள ஆய்வில் நெல் வயலில் பரவலாக பச்சைபாசி பாதிப்பு இருப்பது கண்டறியப் பட்டது. நெல் வயலில் நீர் நின்று கொண்டிருப்பதால் பச்சை பாசி அதிகமாக வளர்கிறது. இது வேர் சுவாசத்தை குறைத்து, செடிகளின் வளர்ச்சியை பாதிக்கிறது.

இதனைக் கட்டுப்படுத்த சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் மு.சகிலா, கீழ்க்கண்ட கட்டுப்பாடு வழிமுறைகளை விவசாயிகளுக்கு அறிவுறுத்துகின்றனர்.

● நீர் மேலாண்மையில் மாறி மாறி நீர் விடும் முறையை பின்பற்ற வேண்டும். நீர் தொடர்ந்து நிற்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

● பாசி தோன்றும் போது ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் காப்பர் சல்பேட் ($CuSO_4$) அளிக்க வேண்டும். பாசி பாதிப்பு அதிகமாக இருந்தால் ஏக்கருக்கு இரண்டு கிலோ வரை பயன்படுத்தலாம். காப்பர் சல்பேட்டை வாய்க்காலில் தண்ணீர் வருகிற இடத்தில் கட்டி வைக்க வேண்டும். அது தண்ணீரில் கரைந்து வயல் முழுவதும் பரவும்.

● இயந்திர முறைகளான கோனோவீடர் பயன்படுத்தி பாசி அடர்த்தியை

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

உடைத்து, மண்ணில் காற்றோட்டத்தை அதிகரிக்க முடியும்.

● பசுந்தாள் உரங்களை பயிரிட்டு மடக்கி உழுவதன் மூலம் மண்ணின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தலாம்.

● உயிர் உரங்களை பயன்படுத்தி மண்ணின் காரஅமில தன்மையின் சமநிலையை பேணிக்காக்க வேண்டும்.

● மண்பரிசோதனையின் பரிந்துரைக்கேற்ப உரமிடுதல் அவசியம். பாஸ்பேட் உரத்தை அதிகமாக பயன்படுத்தகூடாது.

**முக்கிய குறிப்புகள்**

● நீர் தொடர்ந்து நிற்காமல் பார்த்துக் கொள்ளவும்.

● அதிக காப்பர் சல்பேட் அளிப்பதன் மூலம் மண்ணின் கார அமிலத் தன்மை பாதிக்கப்படும்.

● உர அளவு எப்போதும் பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே இடவேண்டும்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் முனைவர் மு.சகிலா மற்றும் திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தனர்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**1. தக்காளி சூப்**

**தேவையான பொருட்கள்**

தக்காளி — 4

வெங்காயம் — 1

பூண்டு — 3 பல்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

வெண்ணெய் — 1 டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

தண்ணீர் — 2 கப்

**செய்முறை**

தக்காளி, வெங்காயம், பூண்டை வேக வைத்து அரைக்கவும். வெண்ணெயில் வதக்கி அரைத்த கலவையை சேர்த்து கொதிக்கவிட்டு மிளகு தூள், உப்பு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# சில்லரை விற்பனையாளர்கள் அரசு அனுமதி பெறாத மற்றும் தரமற்ற உரம் விற்பனை செய்தால் உரிமம் உடனடியாக ரத்து

## வேளாண்மை துறை எச்சரிக்கை!



அரியலூர், ஜுலை 28

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி அறிவுறுத்தலின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், தனியார் உரம் விற்பனை நிலையத்தை ஆய்வு செய்தார். ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறியது, உரம் உரிமை பெற்ற சில்லறை விற்பனையாளர்கள், கண்டிப்பாக அரசு அனுமதி பெறாத உரம் விற்பனை செய்வது மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் வாங்கிய உரம் வேறு மாவட்டத்திற்கு, கடத்தப் பட்டால் உடனடியாக உரம் உரிமம் ரத்து செய்யப்பட்டு, உரக் கட்டுப்பாட்டு சட்டம் 1985-இன் படியும், அத்தியாவசிய பொருள் தடைச் சட்டம் 1955 இன் படியும், உடனடியாக நீதிமன்றத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

உர விற்பனையாளர்கள் அத்தியாவாசிமாக கடைப்பிடிக்க வேண் டியவை பற்றி கூறுகையில், சில்லறை உரம் விற்பனை யாளர்கள், மொத்த உரம் விற்பனையாளர்களிடம் உரம் வாங்கும் போது, அனுமதி பெற்ற விற்பனை நிலையத்துக்கு இன்வாய் உடன் வாங்கும் போது இன்வாய்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள விற்பனை நிலையத்தில் மட்டுமே உரங்களை இருப்பு வைக்க வேண்டும், வேறு ஒரு உரிமம் பெற்ற நிலையத்தில் இருப்பு வைத்திருந்தால் அது தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின்படி மீறிய செய லாகும். இப்படி இருப்பது அறியப்பட்டால் உரிமம் ரத்து செய்யப் படும். அனைத்து உரம் விற்பனையாளர்களும் கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பி.ஓ.எஸ். பில் போட்டு, விவசாயிகளுக்கு கண்டிப் பாக உரம் வாங்கியதற்கான விற்பனை பில் அவசியம் தர வேண்டும்.


உரங்கள் விற்பனை செய்யும்போது விற்பனை பில் முகவரி மற்றும் தொலைபேசி நம்பர் இல்லாமல் விற்பனை செய்யப்படுவது, அனுமதி பெறாத இடத்தில் உரம் இருப்பு வைப்பது, விற்பனை விலைப் பலகை பராமரிக்காமல் இருப்பது அறிந்தால், உரக் கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். சில்லரை உரம் விற்பனையாளர்கள் விற்பனை நிலையத்தில் இருப்பு பதிவேடு இருப்பு, பி.ஓ.எஸ். இயந்திரத்தின் இருப்பு, உண்மை இருப்பு உரங்கள் எப்போதும் சரியாக வைத் திருக்க வேண்டும். விற்பனை பில் கண்டிப்பாக விவசாய முகவரி இல்லாமல் விற்பனை செய்யக் கூடாது. உரம் விற்பனை நிலையத்தில் உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடக்கவில்லை என்றால், உரிய நடவடிக்கை எடுத்து உரம் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

## கூட்டுப் பண்ணை திட்ட முறைகள் மற்றும் இயற்கை உர பயன்பாடுகளை அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, ஜூலை 28

காந்தி கிராம வேளாண் பல்கலைக்கழக கிராம தங்கல் வேளாண் மாணவிகள் லேகாஸ்ரீ, திருஷாத்தா, ஆனந்தி, கவி வர்ஷினி, நதியா நீ ஷஹ பார்ஜோ ஆகியோர் சென்னிமலை வட்டாரத்தில் உள்ள முன்னோடி விவசாயி பழனிச்சாமியின 7 ஏக்கர் நிலத்தில் நெல், காய்கறிகள், வாழை சாகுபடி செய்து, கோழி மற்றும் மாடுகளை வளர்த்து கூட்டுபண்ணை திட்ட முறையைப் பின்பற்றி வரும் அவரை சந்தித்து பாரம்பரிய வேளாண் அறிவு சார்ந்த பல நடைமுறைகளையும், இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் நாங்கள் தெரிந்து கொண்டோம். மேலும், பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களைத் தவிர்க்க பூச்சிக் கொல்லி மற்றும் நோய்க்கொல்லி மருந்துகளை எந்த வளர்ச்சி நிலையில், எந்த நேரத்தில் தெளிக்க வேண்டும் என்பதையும் தெளிவாக எடுத்து கூறினார். அவரது அனுபவங்கள் மற்றும் நடைமுறை ஆலோசனைகள் எங்களுக்கு பயனுள்ள கள அனுபவமாக அமைந்துள்ளது என தெரிவித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைகள் தரம் குறித்து விவசாயிகளே ஆய்வு செய்யலாம்

திருவாரூர், ஜூலை 28

விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்த விதைகள் தரம் குறித்து விதைப்பரிசோதனை மையத்தில் ஆய்வு செய்து பயன்பெற வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விதைப்பு மேற்கொள்வதற்கு முன்பு விதைத்தரம் அறிந்து விதைப்பு செய்யவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். தற்போது சாகுபடி பருவம் தொடங்க இருப்பதால் விவசாயிகள் தரமான விதைகளை உபயோகிக்கவேண்டும். காய்கறி பயிர்களின் விதை தேவையில் 13 முதல் 15 சதவீத சான்று பெற்ற விதைகளே நமக்கு கிடைக்கிறது. மேலும் விவசாயிகள் தனியார் நிறுவனங்களின் வீரிய விதைகளையே நம்பி இருக்கிறார்கள். மேலும் இந்த வீரிய ஒட்டு இரகங்களின் விலை மிக அதிகம். அதிக விலை கொடுத்து விதை களை வாங்கி பயிர் செய்யும்போது அதற்கேற்ற மகசூல் பெற்றால் தான் விவசாயிகள் இலாபம் பெற முடியும். மேலும் காய்கறி பயிர்களில், சான்று பெற்ற விதைகள் விதைக்கப்படுவது இல்லை.

பெரும்பாலும் உண்மை நிலை விதைகளே விற்பனை செய்யப் படுகின்றன. இதனால் அந்த விதைகள் தரமானவையா என, உறுதியாக சொல்ல முடியாது. காய்கறி பயிர்களின் விதைகள் அதிக விலை என்பதால், அதன் முளைப்புத்திறன் மற்றும் பிற விதை காரணிகளின் குணாதிசங்களை விதைப்பரிசோதனை மூலம் அறிந்து விதைப்பது நல்லது. விதை உற்பத்தி, விநியோகம் போன்ற முக்கியமான திட்டங்களில் விதைப்பரிசோதனை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் விதைகளா என்பதைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் உத்திகளே விதைப் பரிசோதனையாகும். விதைப்பரிசோதனை, விதைகளின் தரத்தை விஞ்ஞான பூர்வமாக தெரிந்து கொள்ள உதவுவதுடன், உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் தரமானதா என்று கண்டறியவும் உதவுகின்றது. தற்போது சாகுபடி பருவம் துவங்க உள்ளதால் விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்த விதைகளை விநியோகம் செய்தும் பயன்படுத்தியும் வருகின்றனர். மேலும் காய்கறி பயிர் களில் தங்கள் சொந்த விதைகளையே பயன்படுத்தி வருகின்றனர். இவ்விதம் தாங்களாகவே உற்பத்தி செய்து பயன்படுத்தி வரும் விதைகள் நாளடைவில் வீரியம் குறைந்து மகசூலும் பாதிப் படைகிறது. இதனால் அந்த விதைகள் தரத்துடன் உள்ளனவா என அறிந்து விதைத்திட விதைப்பரிசோதனை அவசியம்.

விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளின் தரத்தை அறிய பணிவிதை மாதிரிக்கு ரூ.80/- கட்டணத்தை நேரிலோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், 15-பி, பெரியமில் தெரு, விஜயபுரம். திருவாரூர் என்ற முகவரிக்கு அனுப்பலாம். விதை மாதிரி அனுப்பும் விவசாயி பெயர், தந்தை பெயர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் பயிரின் வகை, ரகம், மற்றும் குவியல் எண் ஆகியவற்றுடன் விதைகளை துணிப்பையில் வைத்து அனுப்பவேண்டும். மேலும் காய்கறி பயிர்களின் விதைகளை விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பும் போது விதை மாதிரியின் அளவு வருமாறு :

| வ. எண். | பயிர் | பணி விதை மாதிரி அளவு (கிராம்) | வ. எண். | பயிர் | பணி விதை மாதிரி அளவு (கிராம்) |
|---|---|---|---|---|---|
| 1. | வெண்டை | 100 | 9. | பரங்கி | 100 |
| 2. | அவரை | 450 | 10. | பூசணி | 100 |
| 3. | கத்திரி | 10 | 11. | மிளகாய் | 10 |
| 4. | கொத்தவரை | 100 | 12. | தக்காளி | 10 |
| 5. | பாகல் | 250 | 13. | முள்ளங்கி | 50 |
| 6. | சுரைக்காய் | 100 | 14. | முளைக்கீரை | 50 |
| 7. | பீர்க்கங்காய் | 150 | 15. | பாலக்கீரை | 25 |
| 8. | புடலை | 250 | 16. | வெள்ளரி | 100 |
| | | | 17. | பட்டாணி | 250 |

என்ற அளவில் பகுப்பாய்வுக்கு அனுப்பவேண்டும். விதை அனுப்பிய விவசாயிகள் விவரங்கள் ஸ்பெக்ஸ் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு விதைப்பரிசோதனையின் பகுப்பாய்வு முடிவுகள் இருப்பிட முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ் அப் மூலம் தங்கள் அலைபேசிக்கே அனுப்பப்படும்.

மேற்கண்ட இந்த தகவல் ***தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் ரா.அனந்தகுமார்*** ஆகியோர் தெரிவித்து உள்ளார்கள்.

# பப்பாளி மற்றும் தென்னை பயிரில் பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விவசாயிகள் கலந்தாய்வு



சிவகங்கை, ஜூலை 28

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விரிவாக்க சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் மேலவண்ணாயிருப்பு மற்றும் மணலூர் கிராமத்தில் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் விவசாயிகளுடன் இணைந்து பப்பாளி மற்றும் தென்னை பயிரில் பயிர் மேலாண்மை பற்றிய கலந்தாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. துணை வேளாண்மை இயக்குநர் பொ. செல்வம், உழவர் பயிற்சி நிலையம், சிவகங்கை, கலந்தாய்வில் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொண்டார்.

சிங்கம்புணரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் நா.ஞானவேல், பயிற்சிக்கு தலைமை தாங்கினார். மற்றும் குன்றக்குடி வேளாண்மை உதவி பேராசிரியர் பிரபு, கலந்துக் கொண்டு பப்பாளி மற்றும் தென்னை பயிரில் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பயிர்களை பாதுகாக்க ஒருங்கிணைந்த முறைகளை கடை பிடிக்க வேண்டும் என விரிவாக எடுத்து கூறப்பட்டது.

கலந்தாய்வில் உதவி வேளாண்மை இயக்குநர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் உதவி பேராசிரியர் குன்றக்குடி மற்றும் வட்டார தொழில் நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



# நெற்பயிரில் பாக்டீரியல் இலைக்கருகல் நோய் - தெரியுமா?

குறுவை சொர்ணாவாரியில் ஓரளவு நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த பயிரில் இந் நோயின் தாக்கம் பரவலாக காணப்படுகிறது. இந்த நோயானது சாந்தோ மோனாஸ் ஓரைசே (XANTHOMONES ORYZAE ) என்றும் ஆங்கிலத்தில் (BACTERIAL BLIGHT OF RICE) என்றும் அழைக்கப்படுகின்றன.





### அறிகுறிகள் (SYMPTOMS)?

இந்த நோய் நாற்று நிலையில் காணப் பட்டால், இலைகள் சாம்பல் பச்சை நிறமாகி, சுருண்டு மஞ்சள்/வைக்கோல் நிறத்தில் காய்ந்து போகும் முழு நாற்றும் அழுகி போய்விடும். இதனை 'கிரசெக்' நோய் எனப்படும். வளர்ந்த பயிரில் நுனியிலிருந்து இலைகள் கருகி, இலையின் விளிம்பில் இருந்து உள்ளடக்க மஞ்சள் மற்றும் பழுப்பு நிறத்தில் வெளிறி காணப்படும். இந்த நோயின் அதிகபட்சமாக இலைகள் முழுவதுமாக கருகி, நார்நாராக பிரிந்து விடும்.

### நோயை கண்டறிய எளிய பரிசோதனை?

அதிகாலை நேரத்தில் இலையை கிள்ளி, ஒரு கண்ணாடி டம்ளரில் உள்ள தண்ணீரில் உள்ளே போடவும். இலையின் கீழ்பக்கம் (கிள்ளிய பகுதியிலிருந்து) ஒரு மங்கலான திரவம் கலப் பதை கண்கூடாக காணலாம். நல்ல தண்ணீர் மங்கிய கலராக மாறும். இதிலிருந்து இந்த நோயின் தாக்கத்தை கண்டறியலாம்.

### இந்த நோய் பரவக்காரணங்கள்?

1) காற்று, மழை மற்றும் வானிலை

2) அதிகமான தழைச்சத்து பயிருக்கு இடுதல்

3) நோய் தாக்கப்பட்ட பயிர் எச்சங்கள் வயலில் தங்குதல்

### தடுப்பு முறை

இந்த நோய் தாக்கப்பட்ட நெற்பயிருக்கு, பேசில்லஸ் சப்டிலிஸ்/சூடோமோனாஸ் புளுசரன்ஸ் 1 கிலோ மற்றும் + 10 கிலோ பசுஞ்சாணம் ஆகியவற்றை 10 லிட்டரில் தண்ணியில் கலந்து, முதல் நாள் மாலையில் ஊறவைத்து மறுநாள் நன்றாக கலக்கி வடிகட்டி நீரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 15 நாள் இடைவெளியில் மீண்டும் தெளிக்க வேண்டும் அல்லது ஸ்ட்ரெப்டோ மைசின் சல்பேட் + டெட்ராசைக்கிளின் 100 கிராம் மற்றும் 500 கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு கலந்து தெளிக்கலாம்.

அருகேயுள்ள வேளாண் விரிவாக்க மையத்தில் பூஞ்சான மருந்துகள் விற்பனைக்கு வந்துள்ளன கிலோ 180 மட்டுமே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கிசான் கோஸ்தியில் விவசாயிகளை வலுவூட்டிய ICAR-KVK அருப்புக்கோட்டை அறிவியலாளர்கள்



விருதுநகர், ஜூலை 28

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஒன்றியம், அழகியநல்லூர் கிராமத்தில், விவசாய நலன் மற்றும் கூட்டுறவுத் துறையின் ATMA திட்டத்தின் கீழ், வாழை, வெண்டை மற்றும் வெங்காய சாகுபடியை மையமாகக் கொண்டு 'விவசாயிகள் கலந் துரையாடல் கூட்டம்' (Kisan Goshthi) மற்றும் 'கள ஆய்வு நாள்' (Field Day) ஆகியவை 27.07.26 அன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டன. வேளாண் மைத் துறையின் துணை இயக்குநர் (FTC) மற்றும் உதவி இயக்குநர் (ADA, காரியாபட்டி) ஆகியோர் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி தொடங்கி வைத்தனர். மேம்பட்ட பயிர் ரகங்கள், விதை நேர்த்தி முறைகள், சத்து மற்றும் உயிர் உர மேலாண்மை, பருவநிலை மாற்றத்தைத் தாங்கி வளரும் பயிர் முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை நடவடிக்கைகள் ஆகியவை இக்கூட்டத்தில் விரி வாக எடுத்துரைக்கப்பட்டன. இதில் விவசாயிகள் ஆர்வத் துடன் பங்கேற்று, தங்கள் கள அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், செயல்முறை வழிகாட்டுதல்களையும் பெற்றனர்.

மூத்த விஞ்ஞானியும் தலைவருமான டாக்டர் எம். ராம சுப்பிரமணியம் மற்றும் இணைப் பேராசிரியர் (பயிர் இனப் பெருக்கம் மற்றும் மரபியல்) டாக்டர் என்.ஆனந்தி ஆகியோர் தங்கள் நிபுணத்துவ அறிவைக் கொண்டு தொழில்நுட்ப அமர்வுகளைச் சிறப்பித்தனர். ரகத் தேர்வு, மரபணு மேம்பாடு மற்றும் நிலையான உற்பத்தி முறைகள் குறித்து அவர்கள் வழங்கிய ஆழமான கருத்துக்கள் விவசாயிகளுக்குப் பயனுள்ள பரிந்துரைகளாக அமைந்தன. நவீன ஆராய்ச்சி முடிவுகளுக்கும் களப்பயன்பாட்டிற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப் பதன் மூலம், விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை நம்பிக் கையுடனும் தெளிவுடனும் கையாளும் வகையில் அவர்கள் ஊக்கப்படுத்தினர். 60-க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

விவசாயிகள் தகவல்களை எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் போன்ற விழிப்புணர்வுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

வேளாண்மைத் துறை (DAFW) அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (TNAU) விஞ்ஞானிகள் இடையிலான ஒருங்கிணைப்பை இந்நிகழ்ச்சி சிறப்பாக வெளிப் படுத்தியது. இதன் மூலம் வாழை, வெண்டை மற்றும் வெங்காய சாகுபடியில் உற்பத்தித் திறன், லாபம் மற்றும் சாகுபடித் திறனை மேம்படுத்த விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.

# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்




திருப்பூர், ஜூலை 28

திருப்பூர் மாவட்டத்தில் இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி சரவணன் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்துவதால் பெறும் நன்மைகள் மற்றும் இத்திரவ உரங்களை இலைவழி தெளிப்பு முறையில் பயன்படுத்தும் முறை குறித்து விவரித்தார். குருணை உரங்களைவிட விலை குறைவு, எடுத்து செலவும் சுலபம். மேலும், நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிக்கும் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், துல்லியமாக உரங்களை தெளிக்க கிசான் ட்ரோன் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், எதிர்கால வேளாண்மையில் இது முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீடு திட்டம் – நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களை பயன்படுத்துவோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைப்பிற்கு முன் மண் பரிசோதனை

## அதிக மகசூலுக்கான அறிவியல் தொழில்நுட்பம்



விருதுநகர், ஜூலை 28

வேளாண்மையில் குறைந்த உற்பத்திச் செலவில் அதிக மகசூலை பெறுவதற்கு மண்வள மேலாண்மை மிகவும் முக்கிய மானது. ஒரு நிலத்தில் பயிரிடுவதற்கு முன்பு அதன் ஊட்டச்சத்து நிலை, அமில/காரத்தன்மை மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் அளவை அறிவியல் முறையில் அறிந்து கொள்வதே மண் பரிசோதனை ஆகும். விதைப்பிற்கு முன் மண்பரிசோதனை மேற்கொள்வதன் மூலம் பயிரின் தேவைக்கேற்ப உரங்களைத் துல்லியமாகப் பயன் படுத்த முடிவதால், மகசூல் உயர்வதுடன் மண்ணின் நீண்டகால வளமும் பாதுகாக்கப்படுகிறது.

### மண் பரிசோதனையின் அவசியம்

மண் பரிசோதனை மூலம் மண்ணில் உள்ள நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளின் அளவை அறிய முடியும். மேலும் மண்ணின் காரம் நிலை, அமிலம் நிலை, உவர்ப்புத் தன்மை மற்றும் கரிமக் கார்பன் அளவுகளையும் மதிப்பிடலாம். இதன் அடிப்படையில் உரப்பரிந்துரைகள் வழங்கப் படுவதால் தேவையற்ற உரச்செலவு குறைவதோடு, சுற்றுச்சூழல் மாசுபாடும் கட்டுப்படுத்தப்படுகிறது.

### மண் மாதிரி சேகரிக்கும் தொழில்நுட்பம்

மண் மாதிரி சேகரிக்கும் போது ஒரே தன்மை கொண்ட வயலைத் தேர்வு செய்து, ஒரு ஏக்கருக்கு 5–10 இடங்களில் ஜிக்–ஜாக் முறையில் மாதிரிகள் எடுக்க வேண்டும். மேற்பரப்பில் உள்ள தாவர எச்சங்களை அகற்றி, 'V' வடிவில் குழி தோண்டி அதன் பக்க வாட்டி லிருந்து மண்ணை சேகரிக்க வேண்டும். பின்னர் அனைத்து மாதிரி களையும் நன்கு கலந்து நான்கு பாகமாகப் பிரித்தல் முறையில் சுமார் 500 கிராம் பிரதிநிதி மாதிரியைத் தயாரிக்க வேண்டும்.

### பயிர்களுக்கு ஏற்ப மாதிரி எடுக்கும் ஆழம்

- நெல், சிறுதானியங்கள், நிலக்கடலை – 0 முதல் 15 செ.மீ.
- பருத்தி, கரும்பு, வாழை, மிளகாய் – 0 முதல் 22.5 செ.மீ.
- பழத்தோட்டங்கள் – 0–30, 30–60 மற்றும் 60–90 செ.மீ. ஆழங்களில் தனித்தனி மாதிரிகள்.

### மண் பரிசோதனை செய்ய ஏற்ற காலம்

அறுவடைக்குப் பிறகு, உரமிடுவதற்கு முன்பாகவும், அடுத்த பயிரை விதைப்பதற்கு 30-45 நாட்களுக்கு முன்பாகவும் மண் மாதிரி எடுப்பது சிறந்தது. மண் மிகவும் ஈரமாக இருக்கும் நேரத்தில் மாதிரி எடுக்கக்கூடாது. தொடர்ந்து சாகுபடி செய்யப்படும் நிலங்களில் 2-3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மண் பரிசோதனை மேற்கொள்வது பரிந்துரைக்கப்படுகிறது.

### மண் பரிசோதனையின் நன்மைகள்

- மண்ணின் உண்மையான ஊட்டச்சத்து நிலையை அறிய உதவுகிறது.
- உரங்களை தேவையான அளவில் மட்டுமே பயன்படுத்த வழிகாட்டுகிறது.
- உற்பத்திச் செலவை குறைக்கிறது.
- பயிர் மகசூலை அதிகரிக்கிறது.
- மண்ணின் நீண்டகால வளத்தை பாதுகாக்கிறது.
- நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மையை ஊக்குவிக்கிறது.

### அரசு வழங்கும் வசதிகள்

தமிழ்நாடு அரசு மண்பரிசோதனை ஆய்வகங்கள் மூலம் மண் ஆரோக்கிய அட்டைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை வசதி வழங்கப்படுகிறது. வழக்கமான பரிசோதனைகளில் மண்ணின் காரம் நிலை, அமிலம் நிலை, தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து, கந்தகச்சத்து, சுண்ணாம்புச்சத்து, கரிமக் கார்பன் மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் பரிசோதிக்கப்பட்டு, அதற்கேற்ற உரப்பரிந்துரைகளும் வழங்கப்படுகின்றன.

'விதைப்பிற்கு முன் மண்பரிசோதனை – வளமான மண், உயர்ந்த மகசூல்' என்ற கொள்கையை ஒவ்வொரு விவசாயியும் நடைமுறைப்படுத்த வேண்டும். 'மண் காப்போம்; வளம் பெறுவோம்' என்ற எண்ணத்துடன் ஒவ்வொரு விவசாயியும் கால றைப்படி மண் ஆய்வு செய்து, அதன் பரிந்துரைகளின்படி சாகுபடி மேற்கொண்டால், அதிக மகசூலையும் நிலையான விவசாய வளர்ச்சியையும் பெற முடியும். அறிவியல் அடிப்படையிலான மண்வள மேலாண்மை மூலம் செலவைக் குறைத்து, அதிக உற்பத்தி பெற்று, மண்ணின் வளத்தை அடுத்த தலைமுறைக்கும் பாதுகாக்க முடியும். மேலும் விவரங்களுக்கு உங்கள் பகுதியில் உள்ள அரசு மண்பரிசோதனை ஆய்வகங்களை அணுகி மண் மற்றும் பாசன நீரை பரிசோதனை செய்து பயன்பெறலாம்.

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், விருதுநகர்.***

# வட்டார தொழில்நுட்ப குழு கூட்டம் மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடந்தது




மதுரை, ஜூலை 28

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், அட்மா திட்டம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் வட்டார தொழில் நுட்ப குழு கூட்டம் மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் வட்டார வளர்ச்சி அலுவலகம் கூட்ட அரங்கில் 28.07.26 அன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு வரவேற்புரை மற்றும் திட்ட செயல்பாடுகள் குறித்து வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் லதா பேசினார். இக்கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சிசுந்தரம், தலைமை தாங்கினார். தோட்டக்கலை உதவி இயக்குநர் திவ்யா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வேளாண்மை அலுவலர் சித்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருப்பரங்குன்றம் வட்டார ஆலோசனை குழு விவசாய குழு உறுப்பினர்கள் 25 நபர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை இயக்குனர், வேளாண்மை துறை சார்ந்த மானிய திட்டங்கள் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், டிராக்டர் பவர் டில்லர் போன்ற கருவிகள் வாங்க 50 சதவீத மானிய திட்டங்கள், உழவன் செயலி, உயிர் உரங்கள் குறித்து எடுத்துக் கூறினார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் தேசியத் தோட்டக்கலை இயக்கம், நுண்ணுயிர் பாசனம், மாடித்தோட்டம் திட்டம், பயிர் சாகுபடி மற்றும் ஊக்கத்தொகை, மண்புழு உர படுக்கை வெங்காய உரம் சேமிப்பு கிடங்கு ஆகிய மானிய திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனை வேளாண்மை அலுவலர் விவசாயிகளுக்கு உரிய விலை பெற்றுத் தரவும், அறுவடைக்குப் பந்தயம் மேலாண்மையை மேம்படுத்தவும் ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் உழவர் சந்தைகள் குளிர்சாதன கிடங்குகள் மற்றும் ஆன்லைன் வர்த்தக சேவைகளை வழங்குகிறது என்று எடுத்துக் கூறினார்.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ஆத்மா திட்டத்தில் 2026 - 27 ஆம் ஆண்டில் முதல் தவணை நிதி பெறப் பட்டு அதற்குரிய விவசாய பயிற்சிகள், உன் மாநில அளவிலான கல்வி சுற்றுலா மற்றும் செயல் விளக்க திடல் அமைப்பதற்கும் விவசாய திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கலந்து கொண்ட முன்னாடி விவசாயிகள் தங்களுடைய அனுபவங்களையும் இயற்கை விவசாய முறைகளை பற்றியும் தங்களுடைய கருத்துக்களை கூறினார். இக்கூட்டத்திற் கான ஏற்பாடுகளை உதவித்தொழில் நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தார்கள்.



# வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல் - ஓர் பார்வை

காய்கறிகள் நமது அன்றாட வாழ்விற்கு மிகவும் முக்கியமான தாகும். அதுவும் குறிப்பாக சைவ உணவு உண்பவர்களுக்கு மிகவும் அவசியம். இவை உணவின் ஊட்டச்சத்தை அதிகரிப்ப தோடு மட்டுமல்லாமல் உணவை ருசியாக்குகின்றன. ஊட்டச்சத்து வல்லுநர்களின் பரிந்துரைப்படி சீரான திட்ட உணவிற்கு ஒரு நாளைக்கு 85 கிராம் பழங்களையும் 250-400 கிராம் காய்கறி களையும் உண்ண வேண்டும். தற்போதைய காய்கறி உற்பத்தியை கணக்கிட்டு பார்க்கும் போது ஒரு நபருக்கு 120 கிராம் காய்கறி களையே பெற முடிகிறது.

நம்மிடமுள்ள வீட்டு கழிவு நீரை பயன்படுத்தி வீடுகளில் உள்ள காலியான இடங்களில் காய்கறிகளை உற்பத்தி செய்வதால் காய்கறிகளின் பற்றாக்குறையை ஓரளவுக்கு நிவர்த்தி செய்வதுடன் நம்மால் விளைவிக்கப்பட்ட பொருட்களை நாமே உபயோகிக்கின் றோம் என்று மனமகிழ்ச்சியும் ஏற்படும்.

**வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல்**

● தோட்டம் அமைக்க வீட்டின் பின்புறம் அதாவது இடது அல்லது வலப்புற காலியிடங்களை தேர்வு செய்யலாம். வீட்டின் முன்புறம் அதிகமிடமிருந்தால் சிறிய பகுதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

● தேர்வு செய்யப்பட்ட இடம் சதுரமாகவும் அல்லது செவ்வக மாகவும் இருப்பது நல்லது.

● தேர்வு செய்த இடங்களை ஓரம் ஒதுக்கி சிறிய சிறிய பாத்திகளாக பிரித்துக்கொள்ள வேண்டும்.

● பாத்திகளுக்கிடையே நடைபாதை முக்கியமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

● இந்த நடைபாதையின் மேல் பந்தல் அமைத்து கொடிவகைக் காய்கறிகளை பக்கவாட்டில் மூங்கில் படலின் மேல் கொடிவகை காய்கறிகளையும் வளர்க்கலாம்.

● தோட்டத்தின் ஏதாவது ஒரு மூலையில் காய்ந்த இலை, தழை போடுவதற்கு குழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

● விரைவாக வளர்ந்து பயன் தரும் பழ மரங்களான பப்பாளி, வாழை, எலுமிச்சை, மாதுளை வகைகளை வடக்கு திசையில் வளர்ப்பதால் அதனுடைய நிழலால் மற்ற பயிர்களுக்கு பாதிப்பு இல்லாமல் இருக்கும்.

● காய்கறி தோட்டத்தை சுற்றி மூங்கில் வேலி அமைத்து அதில் படரும் கொடிவகை காய்கறி பயிர்களான பாகல், கோவைப்பழம், பீர்க்கை, புடலை போன்ற காய்கறிகளை வளர்க்கலாம்.

● ஓரம் மற்றும் உட்பகுதியின் உயர பாத்திகளில் கிழங்குவகை பயிர்களான மரவள்ளி, கேரட், முள்ளங்கி, டர்னிப், பீட்ருரூட் போன்றவகளை பயிர் செய்யலாம்.

● காய்கறிகளை பருவ இடைவெளிவிட்டு நடுவதால் காய்கறிகள் வருடம் முழுவதும் தொடர்ந்து கிடைக்க ஏதுவாகிறது.

● இடம் அதிகமாக இருப்பின் பந்தல் அமைத்து திராட்சை, பாகல், புடலை, செள செள போன்ற காய்கறிகளை பயிர் செய்யலாம்.

● காலத்திற்கு ஏற்ற காய்கறி, பழவகைகள், பூ வகைகள் தேர்வு செய்து சாகுபடி செய்வது சிறந்தது. தோட்டத்தில் இடமிருப்பின் இரண்டு உயர் விளைச்சல் தென்னையினை வீட்டின் முன்புறம் அல்லது பின்புறம் நடலாம்.

**நடுவதற்கான பருவங்கள்**

| வ. எண் | காய்கறிகளின் பெயர்கள் | பருவம்/மாதம் |
|---|---|---|
| 1 | தட்டைப்பயறு (கோடை காலம்) | மார்ச்-மே, ஆகஸ்டு |
| | தட்டைப்பயறு (மழைக்காலம்) | அக்டோபர் |
| 2 | சர்க்கரை வள்ளிக்கிழங்கு | செப்டம்பர் – அக்டோபர் |
| 3 | கீரை வகைகள் | வருடம் முழுவதும் |
| 4 | முள்ளங்கி | ஜூன் – ஜூலை, செப்டம்பர் |
| 5 | கொத்தவரை | ஜூன்-ஜூலை, அக்டோபர்-நவம்பர் |
| 6 | கத்தரி | டிசம்பர்-ஜனவரி, மே-ஜூன் |
| 7 | கொடிவகை காய்கறிகள் | ஜூலை, ஜனவரி |
| 8 | வெண்டை | ஜூன்-ஆகஸ்டு, பிப்ரவரி |
| 9 | தக்காளி / மிளகாய் | மே-ஜூன், நவம்பர் – டிசம்பர் |
| 10 | வெங்காயம் | ஏப்ரல்-மே, அக்டோபர்-நவம்பர் |

**ஈராண்டு (அ) பல்லாண்டு பயிர்கள்**

- முருங்கை – ஒரு வரிசை
- வாழை – பூவன் (2), மொந்தன் (2)
- பப்பாளி – 5 மரங்கள்
- எலுமிச்சை – 3 மரங்கள்
- நெல்லி – 1 மரம்
- மாதுளை – 1 மரம்
- கறிவேப்பிலை – 1 மரம்

**பயன்கள்**

- குடும்பத்திற்கு தேவையான பசுமை நிறைந்த காய்கள், பழங்கள், கீரை வகைகள், பூக்கள் மற்றும் சில மூலிகை வகைகளும் வளர்த்துக் கொள்ளலாம்.
- நச்சுத்தன்மை அற்ற காய்கள், கீரைகள் மற்றும் பழங்கள் உடனடியாக கிடைக்கும்.
- வீட்டுப்புறத்தை தூய்மையாகவும், அழகாகவும் வைக்க உதவுகிறது.
- பிடித்தமான காய்கள், பழங்கள் கிடைக்க ஏதுவாகிறது.
- வீட்டுப்புறத்தை சுற்றிலும் நல்ல சூழல் அமைகிறது.
- வீட்டிலிருந்து வெளியேறும் பயனற்ற நீரினை பயனுள்ள நீராக மாற்ற இத்தோட்டம் உதவுகிறது.
- குடும்ப நபர்கள் தோட்ட வேலை செய்வதால் நல்ல உடற்பயிற்சி மட்டுமல்லாது, ஆரோக்கியமான, சுகாதாரமான, இனிமையான, பயனுள்ள பொழுது போக்காகவும் அமைகிறது. அதுமட்டுமல்லாது தோட்டக்கலை பற்றி அறிய ஏதுவாகிறது.
- வீட்டிலுள்ள சிறுவர்களுக்கு நல்ல பொழுதுபோக்குடன் கூடிய பாடமாகவும் அமைகிறது.
- குடும்பத்திற்கு தேவையான காய்கள், கீரைகள், பழ வகைகள், பூ வகைகள் மற்றும் முமூலிகை வகைகளின் தேவைகளை நிறைவு செய்வது மட்டுமல்லாமல் பணத்தையும் மிச்சப்படுத்தலாம்.

ஆடி மாதம் ஆரம்பித்துள்ளதால் இப்பருவம் காய்கறி தோட்டம் அமைக்க ஏற்ற காலமாக இருப்பதால் மேற்கூறிய வழிமுறைகளை பின்பற்றி பயனடையுமாறு வேலூர் விதைபரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.லதா தெரிவித்துள்ளார்.



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கம்பம் வட்டாரத்தில் வறட்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி




தேனி, ஜுலை 28

கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, கலசலிங்கம் பல்கலைக்கழகம், கிருஷ்ணன்கோவில், ஸ்ரீவில்லி புத்தூர், விருதுநகர் மாவட்டம், மாணவர்கள் சார்பில், கம்பம் வட்டாரத்தில் உள்ள புதுப்பட்டி கிராமத்தில் 25.07.26 அன்று காலை 11.00 மணியளவில் வறட்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், உள்ளூர் விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களிடையே நீர் சேமிப்பு, திறமையான நீர் பயன்பாடு, வறட்சியை எதிர்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வறட்சியைத் தாங்கும் நிலையான வேளாண் முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

இந்நிகழ்ச்சியில் "ஒவ்வொரு துளி நீரும் பொன்னானது — சேமிப்போம்! காப்போம்!" என்ற கருத்தை மையமாகக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விவசாய உற்பத்தி மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் முக்கிய காரணிகளில் வறட்சியும் ஒன்றாகும் என்பதை மாணவர்கள் எடுத்துரைத்தனர். கிடைக்கக்கூடிய நீர் வளங்களை முறையாகத் திட்டமிட்டு, திறமையாகப் பயன்படுத்துவதன் மூலம் வறட்சியின் தாக்கத்தைக் குறைத்து பயிர் உற்பத்தியைப் பாதுகாக்க முடியும் என்று விளக்கப்பட்டது.

விழிப்புணர்வு நிகழ்ச்சியில், மழைநீர் சேகரிப்பு, பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் சேமிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் திறன்மிக்க நீர்ப் பாசன முறைகளைப் பயன்படுத்துதல் போன்ற பல்வேறு வறட்சி மேலாண்மை முறைகள் விளக்கப்படங்களின் மூலம் எடுத்துரைக் கப்பட்டன. நீர் வீணாவதைத் தடுத்து, பயிர்களின் வேர் பகுதிக்கு நேரடியாக நீரை வழங்குவதற்கு நுண்ணீர்ப்பாசன முறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

மேலும், மண் மூடாக்கு (Mulching) முறையின் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது. வைக்கோல், பயிர் கழிவுகள் போன்ற இயற்கைப்

பொருட்களை மண்ணின் மேற்பரப்பில் பரப்புவதன் மூலம் மண்ணில் உள்ள ஈரப்பதத்தைப் பாதுகாக்கவும், நீர் ஆவியா தலைக் குறைக்கவும், களைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் முடியும் என்று மாணவர்கள் விளக்கினர்.

குறைந்த நீர் கிடைக்கும் சூழ்நிலையிலும் சிறப்பாக வளரக்கூடிய வறட்சியைத் தாங்கும் மற்றும் குறுகிய காலப் பயிர் ரகங்களைத் தேர்வு செய்வதன் முக்கியத்துவமும் விவசாயிகளுக்கு எடுத்துரைக் கப்பட்டது. இத்தகைய பயிர் ரகங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் வறட்சி காலங்களில் பயிர் இழப்பைக் குறைத்து, விவசாய உற்பத்தியை ஓரளவு பாதுகாக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், தொழு உரம், கம்போஸ்ட் மற்றும் பசுந்தாள் உரம் போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத் துவமும் எடுத்துரைக்கப்பட்டது. இவ்வகை கரிம உரங்கள் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதுடன், மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை அதிகரித்து, நீண்ட காலத்திற்கு மண்ணில் ஈரப்பதத்தைப் பாதுகாக்க உதவும் என்று விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் சரியான பயிர் திட்டமிடல் மற்றும் சரியான நேரத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்வது குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. கிடைக்கக்கூடிய நீரின் அளவு மற்றும் மழைப்பொழிவு நிலைமைக்கு ஏற்ப பொருத்தமான பயிர் களைத் தேர்வு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. மேலும், வேளாண் காடு வளர்ப்பு (Agroforestry) மற்றும் மரக் கன்றுகள் நடுதல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் வலியுறுத்தப் பட்டது. மரங்கள் மண்ணைப் பாதுகாப்பதுடன், மண் அரிப்பைக் குறைத்து, நீண்டகால சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு உதவு கின்றன என்று மாணவர்கள் தெரிவித்தனர். மேலும், ஒருங் கிணைந்த பண்ணைய முறையின் முக்கியத் துவமும் விவசாயி களுக்கு விளக்கப்பட்டது. பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் பிற பண்ணைத் தொழில்களை இணைத்து மேற்கொள்வதன் மூலம் கிடைக்கக்கூடிய வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதுடன், வறட்சி மற்றும் பயிர் இழப்பால் ஏற்படும் பொருளாதார அபாயங்களையும் குறைக்க முடியும் என்று எடுத் துரைக்கப்பட்டது. விவசாயிகளின் வறட்சி மேலாண்மைக்கு வானிலை அடிப்படையி லான வேளாண் ஆலோசனைகள் மற்றும் அரசின் உதவித் திட்டங்களைப் பயன்படுத்துவதன் அவசியமும் வலியுறுத் தப்பட்டது. விவசாயிகள் வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் வேளாண் ஆலோசனைகளைத் தொடர்ந்து அறிந்து கொண்டு, விதைப்பு, நீர்ப்பாசனம் மற்றும் பிற வேளாண் பணிகளை சரியான நேரத்தில் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

நிகழ்ச்சியின் போது மாணவர்கள் விவசாயிகளுடன் கலந்துரையாடி, நீர் சேமிப்பு மற்றும் வறட்சி முன்னெச்சரிக்கைக்காக பண்ணை அளவில் செயல்படுத்தக்கூடிய நடைமுறைகளை விளக்கினர். தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்காக நீர் வளங்களைப் பாதுகாப்பதில் விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களின் கூட்டுபொறுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சி "நீரைச் சேமிப்போம், வேளாண்மையைப் பாதுகாப்போம், எதிர்காலத்தைப் பாதுகாப்போம்" என்ற முக்கியமான செய்தியுடன் நிறைவடைந்தது. RAWE திட்டத்தின் ஒரு முக்கிய செயல்பாடாக நடைபெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாணவர்கள் விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு, அவர்களின் நடைமுறை வேளாண் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவும், அதே நேரத்தில் வறட்சி மேலாண்மை மற்றும் நிலையான வேளாண்மை குறித்த பயனுள்ள தகவல்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கவும் உதவியது.

புதுப்பட்டி கிராமம் மற்றும் கம்பம் வட்டார விவசாயிகளிடையே நிலையான வேளாண்மை, திறமையான நீர் மேலாண்மை மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட வேளாண் முறைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், கலசலிங்கம் பல்கலை கழகத்தின் RAWE மாணவர்களான லோகேஸ்வரன், முகமது ஷிபன், சந்தோஷ்குமார், செல்வகுமார் மற்றும் எழிலரசன் ஆகியோரால் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

# உயிர்ம விவசாயம் ஏன் செய்ய வேண்டும்?

உயிர்ம விவசாயம் என்பது இரசாயன உரங்கள், களைக் கொல்லிகள், லச்சிக்கொல்லிகள் மற்றும் லஞ்சாணக் கொல்லிகள் ஆகியவைகளை பயன்படுத்தாமல் முற்றிலும் இயற்கை முறையில் குப்பை எரு, பசுந்தாள் உரங்கள், பசுந்தழை உரங்கள், மண்புழு உரம் மற்றும் அங்கக முறையில் தயாரிக்கப்பட்ட லச்சி விரட்டி, பஞ்ச காவ்யா, ஜீவாமிர்தம், கணஜீவாமிர்தம், வேம்பு, புங்கம் மற்றும் அதைச்சார்ந்த இடுபொருட்கள், லச்சிகளை உண்ணும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான ஒட்டுண்ணிகள் ஆகியவற்றை கொண்டு நீடித்த, நிலையான, சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வகையில் சாகுபடி செய்யும் முறையாகும். நஞ்சில்லா உணவு என்பது உயிர்ம விவசாயத்தின் மூலம் மட்டுமே சாத்தியப்படக்கூடிய ஒன்று. உயிர்ம விவசாயம் ஏன் செய்யவேண்டும்? என்பது குறித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

1. நஞ்சில்லா உணவு
2. பல்லுயிர் பெருக்கம்
3. மண்வளம் பாதுகாப்பு
4. நீடித்த நிலையான உற்பத்தி
5. சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்
6. பண்ணைக் கழிவுகள் மறு சுழற்சி
7. நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்படும்
8. நிலத்தடிநீர் வளம் பாதுகாக்கப்படும்
9. கால்நடை இனங்கள் பாதுகாக்கப்படும்
10. மரபு வழி வேளாண்மை முறை பாதுகாக்கப்படும்
11. வேளாண் சுற்றுச்சூழல் மண்டலம் பாதுகாக்கப்படும்
12. விளைபொருட்கள் அதன் தன்மை மாறாமல் உற்பத்தி
13. பாரம்பரியவிதைகள் அழிவிலிருந்து பாதுகாக்கப்படும்
14. விளைபொருட்களில் அதனுடைய சத்துக்கள் பாதுகாக்கப்படும்
15. எதிர்கால சந்ததியினரின் நலன் மற்றும் வளங்கள் பாதுகாக்கப்படும்

# பயிர் காப்பீடு செய்ய

# வேளாண்மை உதவி இயக்குநர் அழைப்பு

புதுக்கோட்டை, ஜூலை 28

குறுவை நெற்பயிர் மற்றும் காரீப் பருவ நிலக்கடலை, மக்காச்சோள பயிருக்கு காப்பீடு செய்ய இன்னும் ஓரிரு நாட்களே உள்ள நிலையில் குறுவை நெற்பயிர் ஏக்கருக்கு ரூ.745/- மற்றும் நிலக்கடலை பயிர் ஏக்கருக்கு ரூ.596/-, மற்றும் மக்காச்சோள பயிர் ஏக்கருக்கு ரூ.666/- காப்பீட்டு கட்டணம் செலுத்தி இழப்பீடு தவிர்க்கலாம் என்று கந்தர்வ கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.விக்னேஷ், வேளாண்மை உதவி தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது, நடப்பு ஆண்டில் 'எல்-நினோ' தாக்கத்தின் காரணமாக பருவமழை இயல்பை விட குறைவாக பெய்வதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே நடப்பு குறுவை பருவத்தில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளும், காரீப் பருவத்தில் நிலக்கடலை மற்றும் மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகளும் தங்களது பயிர்களை பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்து பயனடையலாம்.

கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நடப்பு 26-27 ஆம் ஆண்டிற்கு

குறுவை நெற்பயிர் ஏக்கருக்கு ரூ.745/- நிலக்கடலை பயிர் ஏக்கருக்கு ரூ.596/- மற்றும் மக்காச்சோள பயிர் ஏக்கருக்கு ரூ.666/- காப்பீட்டு கட்டணமாக விவசாயிகள் செலுத்தினால் போதுமானது. இந்த திட்டத்தில் பயிர் கடன் பெறும் விவசாயிகள் அனைவரும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ சாகுபடி விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

கடன் பெறாத விவசாயிகள் கந்தர்வகோட்டை வட்டாரத்தில் உள்ள பொது சேவை மையங்கள் மூலமாகவோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாகவோ அல்லது கணக்கு வைத்துள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி கிளைகள் மூலமாகவோ பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

குறுவை நெற்பயிருக்கு காப்பீடு செய்வதற்கு ஆத்தங்கரை விடுதி, கல்லாக்கோட்டை, சங்கம் விடுதி, மட்டங்கால், துவார், வெள்ளாள விடுதி, அண்டனூர், குளத்தூர், சேவியர்குடிகாடு, நடுப்பட்டி, நம்புரான்பட்டி, பெரியகோட்டை, புதுப்பட்டி, நெப்புகை, சுந்தம்பட்டி, வீரடிப்பட்டி, பிசானத்தூர், புதுநகர், முதுகுளம் ஆகிய வருவாய் கிராமங்கள், காரீப் நிலக்கடலை மற்றும் மக்காச்சோள பயிருக்கு கந்தர்வகோட்டை வட்டாரம் முழுவதும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்த பயிர்களுக்கு காப்பீடு செய்ய வருகிற 31-ந்தேதி கடைசி நாளாகும். இத்திட்டத்தில் பதிவு செய்ய விரும்பும் விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு 1436 பசலிக்கான அடங்கல், வங்கி சேமிப்பு புத்தகத்தின் முன்பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன் பிரீமிய கட்டணத்தை செலுத்தி அதற்கான ரசீதை பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்த கூடுதல் விவரங்களுக்கு தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர் அல்லது வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

இறுதி நாள் வரை காத்திருக்காமல் விவசாயிகள் விரைந்து பயிர் காப்பீடு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


ஜெயின்
நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396